# GROUP - IV
# STATE LEVEL MOCK TEST
# பொது தமிழ் மற்றும் பொது அறிவு
## Answers with Explanation

SHANKAR IAS ACADEMY

1. விடை : **D**
   - ❖ வெந்நீர் = வெம்மை + நீர்

2. விடை : **B**

   **விற்பூட்டுப் பொருள்கோள்:**
   - ❖ (எ.கா) நெருதல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
     பெருமை உடைத்திவ் வுலகு

3. விடை : **D**

   **திரு.வி.க–வின் கூற்றுகள்:**
   - ❖ உரைநடை எழுதுவது எனது தொழில்
   - ❖ நான் தனியாக வாழவில்லை, தமிழோடு வாழ்கிறேன்

   **நூல்கள்:**
   - ❖ மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
   - ❖ பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம்
   - ❖ இமயமலை அல்லது தியானம்

4. விடை : **A**

   **கண்ணதாசன்:**
   - ❖ சிவகங்கை மாவட்டம் சிறுகூடல் பட்டியில் பிறந்தார்.

   **எழுதிய நூல்கள்:**
   - ❖ கல்லக்குடி மகாகாவியம்
   - ❖ இயேசு காவியம்
   - ❖ ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி
   - ❖ வேலங்குடித் திருவிழா

   **மேற்கோள்:**
   - ❖ நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
     எந்நிலையிலும் எனக்கு மரணமில்லை

5. விடை : **B**

   **வல்லிக்கண்ணன்:**
   - ❖ ஏழையின் குடிசையில்
     அடுப்பும் விளக்கும் தவிர
     எல்லாமே எரிகின்றன

6. **விடை : A**
- ப், ம் - மீகீழ் இதழுறப் பம்மப்பிறக்கும்
- ர், ழ் - அண்ணம் நுனிநா வருட ரழ வரும்
- ற், ன் - அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும்.

7. **விடை : D**
- இந்தியன் ஒப்பீனியன் – நம்பிக்கைதான் அவரது ஆயுதம் என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து வெளியிடப்பட்டது.

8. **விடை : C**

**பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி:**
- பழந்தமிழகத்தின் வாணிகப் பொருள்களைப் பற்றிய குறிப்புகள் இந்நூலில் குறிப்பிடுகின்றன.

**மதுரைக்காஞ்சி:**
- விளைந்து முதிர்ந்த விழுமுத்து

9. **விடை : A**

**செய்யுளிசை அளபெடை / இசைநிறை அளபெடை:**
- செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசை கொண்ட சீர்களாக மட்டுமே வரும்.
- (எ.கா) உழாஅர், படாஅர், கெடாஅ

10. **விடை : D**

| கம்பர் | | |
|---|---|---|
| ஊர் | : | நாகை மாவட்டம் - தேரழுந்தூர் |
| ஆதரித்தவர் | : | திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் |
| அவைப்புலவர் | : | குலோத்துங்க சோழனின் |
| சிறப்பு பெயர் | : | கவிச்சக்கரவர்த்தி, கல்வியில் பெரியவர் கம்பர் |

11. **விடை : B**

**கலவைத் தொடர்:**
- (எ.கா) நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை
- முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண் பெற்றான்.

12. **விடை : B**
- காண் = வேர்ச்சொல்
- கண்ட = பெயரெச்சம்
- கண்டு = வினையெச்சம்
- காணுதல் = தொழிற்பெயர்

13. **விடை : A**

**பரிதிமாற்கலைஞர்:**
- திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்

SHANKAR IAS ACADEMY

14. **விடை : C**

❖ பெரியபுராணத்தை எழுதியவர் சேக்கிழார். இயற்பெயர் - அருண்மொழித்தேவர்

❖ தனியடியார்கள் – 63
தொகையடியார் – 9
-------
சிவனடியார் – 72
-------

15. **விடை : A**

| புறப்பொருள் | | | |
|---|---|---|---|
| 1. | **வெட்சித்திணை** | : | பகைநாட்டின்மீது போர் தொடங்குமுன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச் செய்வது வெட்சித்திணை. அவ்வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள். |
| 2. | **கரந்தைத்திணை** | : | வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது, கரந்தைத்திணை. |
| 3. | **வஞ்சித்திணை** | : | மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக்கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது, வஞ்சித்திணை |
| 4. | **காஞ்சித்திணை** | : | தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை. |
| 5. | **நொச்சித்திணை** | : | பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது நொச்சித்திணை. |
| 6. | **உழிஞைத் திணை** | : | உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை. |
| 7. | **தும்பைத்திணை** | : | பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத் திணை. இவ்வீரர்கள் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவர். |
| 8. | **வாகைத்திணை** | : | வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச்சூடி மகிழ்வது, வாகைத்திணை. |
| 9. | **பாடாண்திணை** | : | பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது, பாடாண்திணை, (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை) |

SHANKAR IAS ACADEMY

| | | | |
|---|---|---|---|
| 10. | **பொதுவியல் திணை** | : | வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை. |
| 11. | **கைக்கிளைத் திணை** | : | கைகிளை என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும். |
| 12. | **பெருந்திணை** | : | பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று இன இருவகைப்படும். |

16. **விடை : B**

**திரு.வி. கல்யாணசுந்தரனார்:**

❖ திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று, அது மன்பதைக்கு - உலகுக்குப் பொது.

**கி.ஆ. பெ. விசுவநாதம்:**

❖ திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது.

17. **விடை : D**

❖ உம்மைத்தொகை - தாய்தந்தை
❖ பண்புத்தொகை - நற்சங்கு, வெண்குழை
❖ உருவகம் - கரகமலம்

18. **விடை : A**

❖ நீளம் = குணப்பெயர் (அ) பண்புப்பெயர்

19. **விடை : B**

❖ பணிவிடம் - ஆறாம் வேற்றுமைத்தொகை
❖ இன்னமுதம் - பண்புத்தொகை
❖ பொங்குகடல் - வினைத்தொகை

20. **விடை : A**

❖ யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்று பாரதியார் சிலப்பதிகாரத்தை புகழ்ந்துள்ளார்.

SHANKAR IAS ACADEMY

21. **விடை : A**

### தமிழகத்தில் அகழாய்வு நடைபெற்ற முக்கிய இடங்கள்



22. **விடை : D**




23. **விடை : C**

**இராவண காவியம்:**

- இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம்.
- 5 காண்டங்கள் :
  - தமிழ்க் காண்டம்
  - இலங்கைக் காண்டம்
  - விந்தக் காண்டம்
  - பழிபுரி காண்டம்
  - போர்க் காண்டம்
- 3100 பாடல்கள் உள்ளன.

24. **விடை : B**

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் | – | கல்கி |
| தமிழ்நாட்டின் ஜேன் ஆஸ்டின் | – | அனுத்தமா |
| தமிழ்நாட்டின் மாபசான் | – | புதுமைப்பித்தன் |
| தமிழ்நாட்டின் இரசூல் கம்சதேவ் | – | பாரதிதாசன் |

25. **விடை : D**

| குமரகுருபரர் | | |
|---|---|---|
| ஊர் | : | திருவைக்குண்டம் |
| இயற்றிய நூல்கள் | : | கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, திருவாரூர் மும்மணிக்கோவை, நீதிநெறி விளக்கம், காசி கலம்பகம் |
| இறப்பு | : | காசியில் |
| காலம் | : | பதினேழாம் நூற்றாண்டு |

SHANKAR IAS ACADEMY

26. **விடை : A**

- ❖ தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்
  (ஏமுன் உயிர்வரின் வ், ய் இரண்டும் வரும்)
- ❖ கிளி + அலகு = கிளி + ய் + அலகு = கிளியலகு
  (இ, ஈ, ஐ ஆகியன முன் உயிர்வரின் ய் தோன்றும்)
- ❖ தினை + துணை = தினைத்துணை
  (இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
  கசதப மிகும்வித வாதன மன்னே)

27. **விடை : C**

**பண்புத்தொகை:**

- ❖ செம்மொழி
- ❖ நன்மொழி
- ❖ நற்றிறம்

28. **விடை : B**

- ❖ பொருட்டு என்னும் நான்காம் வேற்றுமை சொல்லுருபில் வரும்.
- ❖ கூலியின் பொருட்டு வேலை செய்தான்.
- ❖ (கூலிக்கு வேலை)

29. **விடை : D**

| **சங்கரதாஸ் சுவாமிகள் (தமிழ் நாடகத் தலைமையாசிரியர்)** | **பம்மல் சம்பந்தனார்** | **கந்தசாமி** |
| --- | --- | --- |
| **நாடகங்கள்** :<br>பிரகலாதன்<br>லவகுசா<br>சிறுத்தொண்டர்<br>பவளக்கொடி<br>அபிமன்யு<br>சுந்தரி | **சிறப்பு பெயர்கள்** :<br>தமிழ் நாடகத் தந்தை<br>தமிழ் நாடகப் பேராசிரியர்<br>**நாடகம்** :<br>மனோகரா | புதிய நடிப்புக் கலை ஆசிரியர்<br>தமிழ் நாடக மறுமலர்ச்சியின் தந்தை |

30. **விடை : A**

**திருமந்திரம்** :

- ❖ ஆசிரியர் - திருமூலர்
- ❖ சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறை திருமந்திரம்
- ❖ “ஒன்றே குளம் ஒருவனே தேவன்” என்பது இந்நூலின் புகழ்மிக்க தொடராகும்.

31. **விடை : C**

**அம்புஜத்தாம்மாள்:**

- ❖ தம் 70-ம் ஆண்டு நினைவாக “நான் கண்ட பாரதம்” என்னும் நூலை எழுதியுள்ளார்.
- ❖ 1964 ஆம் ஆண்டு தாமரைத்திரு (பத்மஶ்ரீ) விருது பெற்றார்.



SHANKAR IAS ACADEMY

32. **விடை : A**

**பாரதிதாசன்:**

- பாரதியாரால் "சுப்புரத்தினம் ஓர் கவி" என்று அழைக்கப்பட்டார்.
- நூல்கள் :
  - கண்ணகி புரட்சிக் காப்பியம்
  - இளைஞர் இலக்கியம்
  - குறிஞ்சித்திட்டு

33. **விடை : B**

**ஜி.யு. போப்**

- தம்முடைய பத்தொன்பதாம் அகவையில் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1886 –திருக்குறள், 1900 – திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

34. **விடை : D**

| | | |
|---|---|---|
| பேதையார் நட்பு | – | தேய்பிறை போன்றது |
| பண்புடையாளர் நட்பு | – | நவில் தொறும் நூல் நயம் போன்றது |
| அறிவுடையார் நட்பு | – | வளர்பிறை போன்றது |
| இடுக்கண் களையும் நட்பு | – | உடுக்கை இழந்தவர் கை போன்றது |

35. **விடை : C**

| சிறப்புப் பெயர்கள் | | | |
|---|---|---|---|
| **அப்பர்** | **திருஞானசம்பந்தர்** | **சுந்தரர்** | **மாணிக்கவாசகர்** |
| வாகீசர்<br>ஆளுடைய அரசு<br>தாண்டக வேந்தர்<br>தருமசேனர் | பரசமயக் கோளரி<br>ஆளுடைப் பிள்ளை | நம்பி ஆரூரர்<br>வன்தொண்டர்<br>தம்பிரான் தோழன் | அருள் வாசகர் |

36. **விடை : A**

**ஓவியக் கலைஞரின் சிறப்பு பெயர்கள்:**

- ஓவியர், வித்தக வினைஞன், ஓவியப்புலவன், வித்தகர், கண்ணுள் வினைஞன், கிளவி வல்லோன், சித்திரக்காரர்.

37. **விடை : B**

**அறிஞர் அண்ணா எழுதிய நூல்கள்:**

- குமரிக்கோட்டம், ரங்கூன்ராதா, நீதிதேவன் மயக்கம், வேலைக்காரி, ஓர் இரவு

**கலைஞர் கருணாநிதி எழுதிய நூல்கள்:**

- வெள்ளிக் கிழமை, ரோமபுரி பாண்டியன், தூக்குமேடை, குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா, மந்திரிக்குமாரி

SHANKAR IAS ACADEMY

38. **விடை : D**

- தண்டளிர்ப்பதம் - தண்மை + தளிர்பதம்
- வாளரா - வாள் + அரா
- பாவிசை - பசுமை + இசை
- எண்கினங்கள் - எண்கு + இனங்கள்

39. **விடை : C**

**தூ - ஓரெழுத்து ஒருமொழி:**

- தூய்மை, வலிமை, பற்றுக்கோடு, பகை, இறைச்சி, இகழ்ச்சிக்குறிப்பு, தூவி

40. **விடை : B**

- க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ்., ள், ற், ன்

41. **விடை : D**

- ஏலாதி – 81 வெண்பாக்கள்
- திரிகடுகம் – 100 வெண்பாக்கள்

**சிறுபஞ்சமூலம்** :

- ஆசிரியர் - காயாசன்
- சமயம் - சமணம்

**ஐந்து வேர்கள்** :

- கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறுநெருஞ்சி

42. **விடை : A**

| **மலைபடுகடாம்** | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் |
| நூல்வகை | : | புறநூல் |
| பாவகை | : | ஆசிரியப்பா |
| வேறுபெயர்கள் | : | கூத்தராற்றுப்படை |

43. **விடை : A**

- யான் என்னும் தன்மை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது என் எனத்திரியும்

44. **விடை : C**

| | | |
|---|---|---|
| கொற்றவை | – | வெற்றி வேலினை கையில் ஏந்தியவள் |
| பிடாரி | – | கன்னியர் ஏழுவரில் இளையவள் |
| பத்ரகாளி | – | இறைவனை நடனமாடச் செய்தவள் |
| காளி | – | அச்சம் தரும் காட்டை இருப்பிடமாகக் கொண்டவள் |
| தூர்க்கை | – | தாருகன் எனும் அசுரனின் மார்பை பிளந்தவள் |

SHANKAR IAS ACADEMY

45. **விடை : D**

| | | |
|---|---|---|
| வீரமாமுனிவர் | – | தமிழ் சிறுகதையின் முன்னோடி |
| வ.வே.சு. ஐயர் | – | தமிழ் சிறுகதையின் தந்தை |
| புதுமைப்பித்தன் | – | தமிழ் சிறுகதையின் மன்னன் |
| மௌனி | – | தமிழ் சிறுகதையின் திருமூலர் |

46. **விடை : A**

❖ பயண இலக்கியத்தின் முன்னோடி - கதிரேச செட்டியார்
❖ மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை - ம.போ.சி

47. **விடை : D**

| | | |
|---|---|---|
| பொய்கையாழ்வார் | – | முதல் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | – | இரண்டாம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | – | மூன்றாம் திருவந்தாதி |
| திருமழிசையாழ்வார் | – | நான்காம் திருவந்தாதி |
| பெரியாழ்வார் | – | திருப்பல்லாண்டு |
| தொண்டரடிப் பொடியாழ்வார் | – | திருப்பள்ளியெழுச்சி |
| மதுரகவியாழ்வார் | – | கண்ணிநுண் சிறுதாம்பு |
| திருப்பாணாழ்வார் | – | அமலனாதிபிரான் |

48. **விடை : C**

கீழாநெல்லியின் வேறுபெயர்கள்:

❖ கீழக்காய் நெல்லி
❖ கீழ்வாய் நெல்லி

49. **விடை : B**

❖ மரம் - இடுகுறிப்பொதுப்பெயர்

50. **விடை : A**

**மனோன்மணீயம்:**

❖ ஆசிரியர் - பெ. சுந்தரம்பிள்ளை
❖ தமிழில் தோன்றிய நாடக இலக்கியங்களில் முதன்மையாக இது போற்றப்படுகிறது.
❖ நூல் முழுவதும் செய்யும் நடையிலேயே அமைந்திருக்கும்.

51. **விடை : C**

**பாரதியார்:**

❖ "தமிழ்நாட்டில் தமிழ்ப்புலவன் ஒருவன் இல்லையெனும் வசை நீங்க" வந்து தோன்றியவர்.
❖ தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் எனவும் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனவும் தமிழ்மொழி பரவிட விழைந்த தமிழ்ப் பாவலர் ஆவார்.

SHANKAR IAS ACADEMY

52. **விடை : D**

- ❖ மருகி – மருமகள்
- ❖ தனயை – மகள்
- ❖ கனகம் – பொன்

53. **விடை : B**

**அ. வரதநஞ்சையப் பிள்ளை:**

- ❖ தமிழரசி குறவஞ்சி நூலை எழுதினார்
- ❖ விரைந்து கவி பாடுவதில் வல்லவர்
- ❖ கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியர்.

54. **விடை : A**

- ❖ வாழ்த்துவம் – தன்மைப் பன்மை வினைமுற்று
- ❖ வாழிய – வியங்கோள் வினைமுற்று
- ❖ வாழிய வாழிய – அடுக்குத்தொடர்
- ❖ உலகம் – இடவாகுபெயர்
- ❖ திருந்துமொழி – வினைத்தொகை
- ❖ அசைத்த, இசைத்த – பெயரெச்சம்

55. **விடை : C**

**அப்துல் ரகுமான்:**

- ❖ 1937இல் மதுரையில் பிறந்தவர்

**நூல்கள்:**

- ❖ பால் வீதி
- ❖ நேயர் விருப்பம்
- ❖ சொந்தச் சிறைகள்
- ❖ கரைகளே நதியாவதில்லை
- ❖ விலங்குகள் இல்லாத கவிதை

56. **விடை : D**

- ❖ திண்மை – வலிமை
- ❖ தின்மை – தீமை
- ❖ நாண் – நாணம்
- ❖ நான் – தன்மை இடப்பெயர்
- ❖ அண்ணம் – மேல்வாய்
- ❖ அன்னம் – ஒரு பறவை
- ❖ அரண் – மதில்
- ❖ அரன் – சிவன்

57. **விடை : C**

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை:**

- ❖ சிறப்புப்பெயர் + பொதுப்பெயர்



SHANKAR IAS ACADEMY

- இடையில் "ஆகிய" என்ற பண்புருபு மறைந்து வரும்.
- (எ.கா) பனைமரம், மல்லிகைப்பூ, தமிழ்மொழி

58. **விடை : A**

- மக்கள் நல்வாழ்விற்கு ஆவும் ஒரு காரணம் என்பதை உணர்த்த திருஞானசம்பந்தர் பாடினார்.

59. **விடை : B**

60. **விடை : D**

**தாயுமானவர்:**

- பிறந்த ஊர் வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காடு.

61. **விடை : D**

- உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.

| **ஏழு பருவ மங்கை வயதுகள்** | | |
|---|---|---|
| பேதை | – | 5 – 7 |
| பெதும்பை | – | 8 – 11 |
| மங்கை | – | 12 – 13 |
| மடந்தை | – | 14 – 19 |
| அரிவை | – | 20 – 25 |
| தெரிவை | – | 26 – 32 |
| பேரிளம் பெண் | – | 33 – 40 |

62. **விடை : C**

63. **விடை : B**

64. **விடை : D**

**சாலை இளந்திரையன்:**

- இயற்பெயர் – மகாலிங்கம்
- "தமிழ்ப் பழமொழிகளும் சமுதாயமும்" என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.
- உரைவீச்சு என்ற புது இலக்கிய வடிவத்தையாக்க பெருமுயற்சி செய்தவர்.

65. **விடை : B**

- பெருமை + களிறு = பெருங்களிறு
  - ஈறுபோதல் விதிப்படி "மை" கெடும்
    பெரு + களிறு
    (க் + உ) (∵ க் = ங்)
  - இனமிகல் என்னும் விதிப்படி,
    பெருங்களிறு எனவாயிற்று.

SHANKAR IAS ACADEMY

66. **விடை : A**

67. **விடை : D**

❖ மாட்சி : பண்புப்பெயர்
❖ காட்சி : தொழிற்பெயர்

68. **விடை : D**

**வல்லினம் மிகும்:**

❖ பண்புத் தொகை
❖ ஆறாம் வேற்றுமைத் தொகை
❖ ஏழாம் வேற்றுமைத் தொகை
❖ முற்றியலுகரம் பின்
❖ ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**வல்லினம் மிகாது:**

❖ வியங்கோள் வினைமுற்று
❖ இரட்டைக்கிளவி
❖ அடுக்குத்தொடர்
❖ வினைத்தொகை
❖ இரண்டாம் வேற்றுமைத் தொகை

69. **விடை : B**

❖ இணை – (1, 2)
❖ பொழிப்பு – (1, 3)
❖ ஒரூஉ – (1, 4)
❖ கூழை – (1, 2, 3)
❖ மேற்கதுவாய் – (1, 3, 4)
❖ கீழ்க்கதுவாய் – (1, 2, 4)
❖ முற்று – (1, 2, 3, 4)

70. **விடை : C**

**திரிகூடராசப்ப கவிராயர்:**

❖ காலம் – 18ம் நூற்றாண்டு
❖ மடக்கு, திரிபு சிலேடை பாடுவதில் வல்லவர்.

**திருக்குற்றாலக் குறவஞ்சி:**

❖ தமிழின் முதல் குறவஞ்சி நூல்
❖ 96 வகைச் சிற்றிலிக்கியங்களுள் ஒன்று
❖ பாடல்கள் நாடக வடிவல் இருப்பதால் "குறவஞ்சி நாடகம்" எனவும் அழைக்கப்படும்.
❖ பாட்டுடைத்தலைவர் – திருக்குற்றாலநாதர்
பாட்டுடைத்தலைவி – வசந்தவல்லி
குறவன் – சிங்கன்
❖ இயற்றமிழ், இசைத்தமிழ் இரண்டும் கலந்த நூல்.

SHANKAR IAS ACADEMY

71. **விடை : A**

| **சீவகசிந்தாமணி** | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | திருத்தக்க தேவர் |
| ஊர் | : | சோழநாடு |
| காலம் | : | கி.பி. 10-ம் நூற்றாண்டு |
| சமயம் | : | சமணம் |
| பிறநூல்கள் | : | நரிவிருத்தம் |

72. **விடை : D**

❖ அரி / யவற் / றுள்
நிரை நிரை நேர்

73. **விடை : B**

❖ கடம் – உடம்பு
❖ வீறாப்பு – இறுமாப்பு
❖ கடுவெளி – சுத்தவெளி
❖ வேம்பு – கசப்பான சொற்கள்

74. **விடை : C**

**முத்துராமலிங்கனாரின் மேற்கோள்:**

❖ சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை, ஆன்மீகத்திற்கும் இல்லை
❖ வீரம் இல்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்.
❖ பனைமரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு, வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு.

75. **விடை : A**

**மு.வ.வின் கூற்றுகள்:**

❖ ஆட்சிமொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும்.
❖ கடிதம், பணவிடை, விளம்பரப் பலகை, விற்பனைச்சீட்டு முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக.

76. **விடை : B**

| | | |
|---|---|---|
| எரிசினக்கொற்றவை | – | ரௌத்திர துர்க்கை |
| தேன்மொழிப் பாவை | – | மதுரவசனி |
| திருவரங்கம் | – | ஸ்ரீரங்கம் |
| திருச்சிற்றம்பலம் | – | சிதம்பரம் |
| திருமறைக்காடு | – | வேதாரண்யம் |

77. **விடை : D**

78. **விடை : A**

SHANKAR IAS ACADEMY

79. **விடை : C**

| தேவநேயப் பாவாணர் | | |
|---|---|---|
| ஊர் | : | சங்கரன் கோவில் |
| காலம் | : | 07-02-1902 – 15-01-1981 |
| சிறப்பு | : | செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப் பெருங்காவலர் என 174 சிறப்புப் பெயர்கள் |
| மேற்கோள் | : | எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு. |

80. **விடை : B**

81. **விடை : B**

❖ <u>தரும்</u> வளவன்: மாத்திரை அளவு =

த = 1 மாத்திரை
ரு = 1 மாத்திரை
ம் = ¼ மாத்திரை

2¼ மாத்திரை

82. **விடை : D**

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

SHANKAR IAS ACADEMY

83. **விடை : A**

❖ வினா வழு:

"முட்டையிட்டது சேவலா கோழியா"?

84. **விடை : B**

**நேரிசை ஆசிரியப்பா:**

- அடி – 4 அடிகளைப் பெற்று வரும்
- சீர் – ஈற்றயலடி 3 சீர்களாய் (சிந்தடி) பெற்று வரும்.

**நிலைமண்டில ஆசிரியப்பா:**

- எல்லா அடிகளும் 4 சீர்களாக வரும்

**அடிமறிமண்டில ஆசிரியப்பா:**

- அடிகளை மாற்றி படித்தாலும் பொருள் மாறாது.

85. **விடை : C**

| **காளமேகப்புலவர்** | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | வரதன் |
| ஆதரித்தவர் | : | திருமலைராயர் |
| பணி | : | திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணி |
| நூல்கள் | : | சரஸ்வதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல், திருவானைக்கா உலா, சமுத்திர விலாசம் |

86. **விடை : A**

| **ரா.பி. சேதுப்பிள்ளை** | | |
|---|---|---|
| ஊர் | : | திருநெல்வேலி |
| சிறப்புப்பெயர் | : | சொல்லின் செல்வர் |
| நூல்கள் | : | ஊரும்பேரும், செந்தமிழும் கொடுந்தமிழும், வேலும் வில்லும், திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார விளக்கம், கால்டுவெல் ஐயா சரிதம், கடற்கரையிலே |

87. **விடை : B**

**பொருள்கோள் 8 வகைப்படும்:**

1) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
2) மொழிமாற்றுப் பொருள்கோள்
3) நிரனிறைப் பொருள்கோள்
4) விற்பூட்டு பொருள்கோள் (பூட்டுவிற் பொருள்கோள்)
5) தாப்பிசைப் பொருள்கோள்
6) அளைமறிப் பாப்புப் பொருள்கோள்
7) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
8) அடிமறி மாற்றுப் பொருள்கோள்

SHANKAR IAS ACADEMY

88. **விடை : B**

**சீவகசிந்தாமணி:**

- 3145 பாடல்கள் உள்ளன.
- விருத்தம் என்னும் பாவினத்தால் அடைந்த முதல் தமிழ்க் காப்பியம்

**ஜி.யு. போப்:**

- "தமிழ் மொழிக்கு இலியட்டும் இதுவே; ஒடிசியும் இதுவே" எனப் பாராட்டுகிறார்.

89. **விடை : C**

| முல்லைப்பாட்டு | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | நப்பூதனார் |
| பாடல்கள் | : | 103 அடிகள் |
| பாவகை | : | ஆசிரியப்பா |
| நூல் வகை | : | அகநூல் |
| வேறு பெயர் | : | நெஞ்சாற்றுப்படை |

90. **விடை : A**

- திருக்குறளைப் போலவே முப்பாலை உடையது.
- அறம் – 13
  பொருள் – 24
  இன்பம் – 3
  ---------
  40
  ---------
- ஆசிரியர் : சமண முனிவர்கள் (பாண்டிய நாடு)
- பாடல்கள் : 400
- சிறப்புப்பெயர்கள் : நாலடி நானூறு, வேளாண் வேதம்
- பாவகை : வெண்பா

91. **விடை : D**

- ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம். இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவப்பெற்றதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம், "யசோதரன்" என்னும் அவந்தி நாட்டு மன்னன் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது. பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் குறிப்பிடப்படுகிறது.

92. **விடை : B**

| தென்திராவிடம் | நடுத்திராவிடம் | வடதிராவிடம் |
|---|---|---|
| தமிழ் | தெலுங்கு | குரூக் |
| மலையாளம் | கூயி | மால்தோ |
| கன்னடம் | கோண்டா | பிராகுய் (பிராகுயி) |
| குடகு (கொடகு) | கோலாமி (கொலாமி) | |
| துளு | நாய்க்கி | |
| தோடா | பெங்கோ | |

SHANKAR IAS ACADEMY

| | | |
|---|---|---|
| கொரகா<br>இருளா | மண்டா<br>பர்ஜி<br>கதயா<br>கோண்டி<br>கோயா | |

மேலுள்ள பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர்.

93. **விடை : A**

**க. சச்சிதானந்தன்:**

❖ சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்

94. **விடை : C**

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

❖ பொருள் : பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? அதுபோலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?
❖ அணி : எடுத்துக்காட்டு உவமையணி

95. **விடை : B**

**ஸ்டீபன் ஹாக்கிங்:**

❖ தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்?

96. **விடை : D**

❖ Underground drainage என்ற தொடரை மொழி பெயர்ப்பதில் தடுமாற்றம் வந்தது. பாதாளச் சாக்கடை என்பது போன்றெல்லாம் மொழிபெயர்த்தனர். தமிழோடு தொடர்புடைய மலையாள மொழியில் பயன்படுத்திய புதைசாக்கடை என்ற சொல் பொருத்தமாக இருப்பதைக் கண்டனர். அதையே பயன்படுத்தவும் தொடங்கினர்.

97. **விடை : B**

**காமராசரின் சிறப்புப் பெயர்:**

❖ பெருந்தலைவர், படிக்காத மேதை, கர்மவீரர், கறுப்புக்காந்தி, ஏழைப்பங்காளர், தலைவர்களை உருவாக்குபவர்.

**காமராசருக்குத் தமிழக அரசு செய்த சிறப்புகள்**

❖ மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- நடுவண் அரசு 1976இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் மற்றும் விருதுநகர் இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.
- சென்னை மெரினா கடற்கரையில் சிலை நிறுவப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

98. **விடை : A**

- தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். கவிஞாயிறு, என்னும் அடைமொழி பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.

99. **விடை : C**

100. **விடை : B**

- உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகள் (1600 – 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.

101. **விடை : A**

- அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் டிசம்பர், 09 1946 அன்று நடைபெற்றது.
- அரசியலமைப்புச் சட்டத்தினை நிறைவு செய்ய 2 வருடங்கள், 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் ஆகியது.
- இப்பணி நவம்பர் 26, 1949 அன்று நிறைவடைந்தது. தற்பொழுது இந்த நாள் அரசியலமைப்பு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- அரசியலமைப்புச் சட்டம் ஜனவரி 26, 1950 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த நாள் குடியரசு தினமாக கடைபிடிக்கப்பட்டது.
- அரசியலமைப்புச் சட்டத்தை இயற்ற 64 லட்சம் ரூபாய் செலவானது.

102. **விடை : B**

- 52வது திருத்தச் சட்டம், 1985-ன் மூலம் சேர்க்கப்பட்ட 10வது அட்டவணை கட்சித்தாவல் நடை சட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இதன் நோக்கம் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி தாவல்களை (தவறுகளை) தடுப்பதே ஆகும்.

SHANKAR IAS ACADEMY

103. **விடை : C**

| நாடு | அம்சங்கள் |
|---|---|
| அமெரிக்கா | அடிப்படை உரிமைகள், நீதித்துறையின் சுதந்திரம், நீதிப்புனராய்வு, குடியரசுத்தலைவரின் பதவிநீக்கம், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிநீக்கம், துணைக்குடியரசுத் தலைவர் பதவி. |
| சோவியத் | அடிப்படை கடமைகள் மற்றும் முகப்புரையிலுள்ள நீதிக்கொள்கை (சமூக, பொருளாதார மற்றும் அரசியல்) |
| ஆஸ்திரேலியா | பொதுப்பட்டியல், சுதந்திரமான வணிகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு மற்றும் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம். |
| கனடா | வலுவான மத்திய அரசுடன் கூடிய கூட்டாட்சி முறை. |

104. **விடை : D**

- L.M. சிங்வி குழு (1986) பஞ்சாயத்து ராஜ்ஜிய அமைப்புகளுக்கு அரசியலமைப்பு நிலையை வழங்க பரிந்துரை செய்தது.
- 73வது திருத்த சட்டம் 1992, புதிய அட்டவணையாக 11வது அட்டவணையை அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்த்து பஞ்சாயத்து அமைப்புகளுக்கு (ஊரக உள்ளாட்சி அரசுகள்) அரசியலமைப்பு அங்கீகாரத்தை வழங்கியது.
- அதேபோல், 74வது திருத்தச் சட்டம் 1992 பகுதி IX-A என்ற புதிய பகுதியையும் 12வது அட்டவணையையும் அரசியலமைப்பு சட்டத்தில் சேர்த்து நகராட்சி அமைப்புகளுக்கு (நகர்ப்புற உள்ளாட்சி அரசுகள்) அரசியலமைப்பு அங்கீகாரத்தினை வழங்கியது.

105. **விடை : C**

- லோத்தல், குஜராத்திலுள்ள போக்வா நதிக்கரையில் (சபர்மதி ஆற்றின் துணை ஆறு) அமைந்துள்ளது.
- ஒரு கடற்கரை துறைமுகம் குஜராத்திலுள்ள லோத்தல் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.
- இது 1957 ஆம் ஆண்டு S.R. ராவ் என்பவரால் முதன்முதலில் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

106. **விடை : A**

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| தேவிசந்திரகுப்தம் மற்றும் முத்ரராக்சசம் | விசாகதத்தர் |
| ஹர்ஷசரிதம் | பாணர் |
| ரத்னாவளி, நாகநந்தம், பிரியதர்சிகம் | ஹர்ஷர் |
| சி-யு-கி | யுவான் சுவாங் |

107. **விடை : C**

- முதலாம் குமாரகுப்தர் நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவினார்.
- இந்த பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள் 8 மகாபாடசாலைகள் மற்றும் மூன்று பெரும் நூலகங்கள் அமைந்திருந்தன.
- நாலந்தா பல்கலைகக்கழகம் 1193 ஆம் ஆண்டில் மம்லுக் (துருக்கிய இஸ்லாமியர்கள்) அரசரான பக்தியார் கால்ஜியினால் அழிக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

108. **விடை : C**

- அஸ்டப்பிரதான் என்பது, 1674 ஆம் ஆண்டு சத்ரபதி சிவாஜியினால் அமைக்கப்பட்ட எட்டு அமைச்சர்களைக் கொண்ட சபை ஆகும்.
- அஸ்டத்திக்கஜர்கள் எனப்படும் எட்டு சிறந்த அறிஞர்கள் கிருஷ்ணதேவராயரின் ராஜசபையில் இருந்தனர்.
- இரண்டாம் சந்திரகுப்தர் விக்கிரமாதித்யன் என்றும் அழைக்கப்பட்டார். இவரது அவையில் கலை, இலக்கியம் மற்றும் அறிவியல் போன்ற வெவ்வேறு துறைகளில் சிறந்த ஒன்பது அறிஞர்கள் இருந்தனர். இவர்கள் ஒன்பது ரத்தினங்கள் (அ) நவரத்தினங்கள் எனப்பட்டனர்.

109. **விடை : A**

- காசிரங்கா புலிகள் காப்பகம் – அசாம்
  - இங்கு ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் காணப்படுகின்றன.
  - அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது.
- ராஜாஜி புலிகள் காப்பகம் – உத்தரகாண்ட்
- புக்ஸா தேசியப் பூங்கா – மேற்கு வங்கம்
- கேவலாதேவ் கானா தேசிய பூங்கா – ராஜஸ்தான்
- சேசாச்சலம் மலைக் குன்றுகள் – ஆந்திரப்பிரதேசம்
  - உயிர்கோளங்களுள் ஒன்று
- லோக்டாக் ஏரி – மணிப்பூர்
  - வடகிழக்கு இந்தியாவில் உள்ள மிகப்பெரிய நன்னீர் ஏரி
  - உலகின் ஒரே மிதக்கும் தேசிய பூங்காவான – கெய்புல் லம்ஜாவோ தேசியப் பூங்கா இங்கு அமைந்துள்ளது.

110. **விடை : A**

- சூரியக் குடும்பத்தில் மிகவும் வெப்பமான கோள் – வெள்ளி
- அதிக எண்ணிக்கையிலான சந்திரனைக் கொண்ட கோள் – வியாழன்
- மிக நீண்ட சுழற்சிக்காலம் கொண்ட கோள் – வெள்ளி
- போர்க் கடவுள் என்றழைக்கப்படும் கோள் – செவ்வாய்

111. **விடை : B**

- சென்டினல் பழங்குடியினர் அந்தமான் நிகோபார் தீவுகளில் காணப்படுகின்றனர்.

112. **விடை : C**

- சுபன்ஶ்ரீ, காமெங், மனாஸ், சன்கோஷ் ஆகியவை பிரம்மபுத்திரா நதியின் கிளை நதிகளாகும்.

113. **விடை : B**

- A Prime number is the number which has only 2 factors 1 and the number itself. Hence 1 is the only common factor for 2 prime numbers making it H.C.F.

SHANKAR IAS ACADEMY

114. **விடை : C**

3, 6, 9, 12 ............ 111.

1st term a = 3

Common difference d = 6 – 3 = 3

Last term $t_n$ = 111

Let No. of terms be 'n'

$$t_n = a + (n-1)d$$
$$111 = 3 + (n-1)3$$
$$\frac{108}{3} = n-1$$
$$36 = n-1$$
$$\therefore n = 37$$

∴ No. of terms = 37.

115. **விடை : B**

Given,

Diameter d = 2.8 m

Radius, r = 1.4 m

Height = 3 m

Area Covered in one revolution = C.S.A of the cylinder

$= 2\pi rh = 2 \times \frac{22}{7} \times 1.4 \times 3$

$= 26.4\ m^2$

Area Covered in 1 revolution = $26.4\ m^2$

Area Covered in 8 revolutions = $8 \times 26.4 = 211.2\ m^2$

116. **விடை : B**

Let the original radius of the sphere be '100'

Original surface area of the sphere $= 4\pi r^2$

$= 4 \times \frac{22}{7} \times 100 \times 100$

New radius = 100 + 25% of 100 = 100 + $\frac{25}{100} \times 100$ = 125

New surface area of the sphere $= 4\pi r^2$

$= 4 \times \frac{22}{7} \times 125 \times 125$

SHANKAR IAS ACADEMY

Increase in surface area $= \frac{y-x}{x} \times 100$

$= \frac{\left(4 \times \frac{22}{7} \times 125 \times 125\right) - \left(4 \times \frac{22}{7} \times 100 \times 100\right)}{4 \times \frac{22}{7} \times 100 \times 100} \times 100$

$= \frac{1375000 - 880000}{8800}$

$= \frac{495000}{8800}$

$= 56.25\%$

117. **விடை : B**

Diameter of cylinder (A) = 7 cm

Radius, $= \frac{7}{2}$ cm

Height = 21 cm

Volume of cylinder $= \pi r^2 h$

$= \frac{22}{7} \times \frac{7}{2} \times \frac{7}{2} \times 21$

$= 808.5 \text{ cm}^3$

Diameter of cylinder (B) = 21 cm

Radius, $= \frac{21}{2}$ cm

Height = 7 cm

Volume of Cylinder $= \pi r^2 h$

$= \frac{22}{7} \times \frac{21}{2} \times \frac{21}{2} \times 7$

$= 2425.5 \text{ cm}^3$

∴ Difference between the volume

of Cylinder A & Cylinder B = 2425.5 – 808.5

$= 1617 \text{ cm}^3$

118. **விடை : C**

| மாநிலம் | முதலமைச்சர் |
|---|---|
| ஒடிசா | நவீன் பட்நாயக் – தொடர்ந்து 5வது முறையாக |
| ஆந்திரப்பிரதேசம் | ஜகன்மோகன் ரெட்டி – மே, 30 2019 அன்று முதல்வராக பதவியேற்றார்.<br>கட்சி : YSR காங்கிரஸ் கட்சி |

SHANKAR IAS ACADEMY

119. **விடை : B**

| **விருதுகள்/பரிசுகள்** | **நபர்கள்/அமைப்பு** |
|---|---|
| **பாரத் ரத்னா, 2019** | ➢ பிரனாப் முகர்ஜி<br>➢ நானாஜி தேஸ்முக் – மரணத்திற்குப் பின்<br>➢ பாடகர் பூபன் ஹசாரிகா – மரணத்திற்குப் பின் |
| **சுவஸ்த் பாரத் யாத்ராவின் கீழ் விருதுகள்** | ➢ சிறந்த மாநிலம் – தமிழ்நாடு |
| | ➢ 3 கோடிக்கு மேல் மக்கள்தொகை கொண்ட சிறந்த மாநிலங்கள்: குஜராத், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரம் |
| | ➢ 3 கோடிக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட சிறந்த மாநிலங்கள் : பஞ்சாப், கோவா மற்றும் டெல்லி |
| | ➢ சிறப்பு விருதுகள் : மேகாலயா, ஜம்மு-காஷ்மீர் மற்றும் உத்ரகாண்ட் மலைப்பாங்கான மற்றும் கடினமான நிலப்பரப்புப் பகுதியாக இருப்பினும் அவற்றின் பங்கேற்பிற்காக சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| **அசோக சக்ரா விருது** | ➢ லான்ஸ் நாயக் நசீர் வாணி - மரணத்திற்குப்பின் |
| **பத்மஸ்ரீ விருதுகள் 2019 – தமிழ்நாடு** | ➢ பங்காரு அடிகளார் – மேல்மருவத்தூர் கோவிலின் நிறுவனர்<br>➢ சரத் கமல் – டேபிள் டென்னிஸ் வீரர்<br>➢ நார்த்தகி நடராஜ்– திருநங்கை பரதநாட்டிய நடனம் கலைஞர்<br>➢ மதுரை சின்னப்பிள்ளை – சமூக சேவகர்<br>➢ R.V. ரமணி – சங்கரா கண் அறக்கட்டளையின் நிறுவனர்<br>➢ ஆனந்தன் சிவமணி – இசைக்கலைஞர்<br>➢ ராமசாமி வெங்கடசாமி – மருத்துவம் (மருத்துவர்) |
| **பத்மஸ்ரீ விருதுகள் 2019 – கர்நாடகம்** | ➢ பிரபுதேவா |
| **பத்மஸ்ரீ விருதுகள் 2019 – விளையாட்டு** | ➢ பச்சேந்திரி பால் - பத்ம பூஷன் விருதுகள்<br>➢ சுனில் சேத்ரி<br>➢ ஹரிகா தோரணவள்ளி<br>➢ கௌதம் கம்பீர்<br>➢ சரத் கமல்<br>➢ பம்பாய்லா தேவி லெய்ஸ்ராம்<br>➢ பஜ்ரங் புனியா<br>➢ பிரசாந்தி சிங்<br>➢ அஜய் தாக்கூர் |

SHANKAR IAS ACADEMY

120. **விடை : A**

| புத்தகம் | எழுதியவர் |
|---|---|
| Cricket World Cup: The Indian Challenge | ஆசிஸ் ரே |
| "My Life, My Mission" – Autobiography | பாபா ராம்தேவ் |
| Function of Data Sovereignty – The Pursuit of Supremacy | வினித் கோயங்கா |
| Adventures of the GST Man | ஸ்ரீனிவாஸ் கோட்னி |
| Lessons Life Taught Me, Unknowingly – Autobiography | அனுபம் கேர் |
| Game Changer | ஷாகித் அப்ரிடியின் சுயசரிதை |
| Chequered Brilliance: The Many Lives of V K Krishna Menon | ஜெய்ராம் ரமேஷ் - முன்னாள் மத்திய அமைச்சர் |
| Indian Fiscal Federalism | Y.V.ரெட்டி மற்றும் G.R.ரெட்டி |
| The "Politics of Jugaad: The Coalition Handbook" | சபா நக்வி |

121. **விடை : D**

- ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம், டிசம்பர் 2014-ல் ஹயாபூசா – 2ஐ விண்வெளியில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் குறிக்கோள் : யுகு (Ryugu) என்ற அரை மைல் விட்டம் கொண்ட குறுங்கோள் 131 மில்லியன் மைல் தூரத்தில் சூரியனைச் சுற்றி வரும் (211 மில்லியன் கிலோ மீட்டர்கள்) இக்கோளினை ஆராயவும் மாதிரிகளை சேகரிக்கவும்.
- இந்த ஆய்வு ஜூன் 2018 அன்று அதன் இலக்கை அடைந்தது. பின்னர் கண்காணிப்பு, சிறுகோளின் ஈர்ப்பை அளவிடுதல் ஆகியவற்றில் ஈடுபடுகிறது.
- இது செப்புத் தகடு மற்றும் ஒரு பெட்டி வெடி பொருட்களைக் கொண்டு சிறுகோளின் மேற்பரப்பை வெடிக்கச் செய்து பாறை மற்றும் மண் குப்பைகளை சேகரிக்க நேற்று இரவு வெற்றிகரமாக யுகுவில் தரையிறக்கியது.

122. **விடை : B**

- 32வது மாவட்டம் – திருப்பூர்
- 33வது மாவட்டம் – கள்ளக்குறிச்சி
- 34வது மாவட்டம் – தென்காசி
- 35வது மாவட்டம் – செங்கல்பட்டு

123. **விடை : B**

- கில்பெர்ட் ஸ்லேட்டர் – சில தென் இந்திய கிராமங்கள்.
- லயோனல் ராபின்ஸ் – "பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய கட்டுரை" (1932)
- ஆல்பிரட் மார்ஷஷ் (1842 – 1924) – "பொருளாதாரக் கோட்பாடுகள்" (1890)
- ஜே.எம். கீன்ஸ் – "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு" 1936 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

124. **விடை : B**

- ❖ பிட்காயன் – மெய்நிகர் பணம் (Virtual Money)
- ❖ பற்று அட்டை – பிளாஸ்டிக் பணம் (Debit Card)

125. **விடை : D**

- ❖ ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (இந்திய ஸ்டேட் வங்கி) ஓர் பொது வணிக வங்கி ஆகும். மற்ற அனைத்து நிறுவனங்களும் இயற்கையில் ஒழுங்குமுறைகளைக் (Regulatory) கொண்டுள்ளன மற்றும் எந்தவொரு வணிகச் செயல்பாடுகளையும் கொண்டிருப்பதில்லை.

126. **விடை : D**

- ❖ ஏன் ஆட்டோமொபைல் வாகனங்கள் (இரு சக்கர வாகனங்கள்) கூரிய முனைகளுடன் வடிவமைக்கப்படுகின்றன என்பதனைப் பற்றிய சரியான கூற்று:
  - i) இரு சக்கர வாகனத்திற்கு எதிரான / எதிராக வரும் எதிர்புற காற்றினது எதிர்ப்பை (Air resistance) குறைக்க
  - ii) இரு சக்கர வாகனத்தில் என்ஜினால் மேற்கொள்ளப்படும் எரிபொருள் நுகர்வைக் குறைக்க.
